Scale D Tempo 122 Style Ballroom> Schlager Alp

18. நிர்பந்தமான மனிதன் (ரோமர் அதி.7)

நிர்பந்தமான மனிதன் நான்
இந்த மரண சரீரத்தில் மீட்பைத் தாரும் (ரோமர் 7:24)
நான் விரும்பும் நன்மையை செய்யாமால்
நான் விரும்பா தீமையே செய்கின்றேன் (ரோமர் 7:19)

1

தேவனுக்கென்று கனி கொடுக்கவே (ரோமர் 7:4)
அற்பணித்திருக்கும் என்னையே
பாவ இச்சைகள் மரணத்தின் கனி கொடுக்க
எந்தன் அவயவங்களில் என்னை பெலன் கொண்டதே
(ரோமர் 7:5)

பல்லவி

இரங்கும் இயேசுவே
உந்தன் பாதம் பணிகின்றேன்
உந்தன் ஆவியால்
என்னை நிரப்பும் இயேசுவே – நிர்பந்தமான

2

நான் விரும்பாததையே நான் செய்திட்டேன்
என்னில் வாசமாயிருக்கும் பாவமன்றோ(ரோமர் 7:20)
எந்தன் மனதின் சட்டத்தோடு போராடியே
எந்தன் அவயவத்தின் சட்டமோ சிறை கொண்டதே (ரோ7:23)

3

கர்த்தருக்காக எந்தன் வாழ்வினை
ஒப்படைத்திருக்கும் என்னையே
உலக பற்று செல்வம் பெருமை எல்லாம்
உம்மை மறைத்தென்னை இருளில் ஆக்கினதே - இர